மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 556—திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

556—

திருவையாறு தொகுதியில் ஆழ்குழாய்க் கிணறுகள்.

*11650—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவையாறு தொகுதியில் கட்டளைக் கால்வாய் மூலம் பாசன வசதி பெறாத செங்கிப்பட்டி, பாளையப்பட்டி பகுதிகளிலுள்ள ஏரிகளில் வறட்சி காலங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குறைந்த வாடகைக்கு மோட்டார்கள் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—

இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கட்டளை வாய்க்கால் பகுதியில் செங்கிப்பட்டி, பாளையப்பட்டி பகுதியிலுள்ள ஏரிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குறைந்த வாடகைக்கு மோட்டார்கள் கொடுத்து விவசாயிகளை ஊக்குவிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் ஆயில் இன்ஜின் வாங்குவதாக இருந்தாலும் அல்லது மோட்டார் இஞ்சின் வாங்குவதாக இருந்தாலும் அவர்களுக்கு அந்த விலையில் 30 சதவிகித மானியத்தை வழங்குவதற்கு அரசிட்டத்தில் திட்டங்கள் இருக்கின்றன. அதேபோல், அங்கே தண்ணீரை மேல் வடிமுனை குழாய்கள் மூலமாக ஏற்றுவதற்கு வேண்டிய வசதிகளை அரசு மானியத்தில் செயற்படுத்த இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1993 ஏப்ரல் 30]

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு வேண்டியதை மானிய விலையில் மானியத்தின் மூலம் தண்ணீர் கொடுப்பதற்கு வசதி இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நன்றி, அதோடு என்னுடைய தொகுதியைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், ஐந்து ஆறுகள் ஓடினாலும், ஒரு பகுதியில் வறட்சியான நிலையில் கட்டளை வாய்க்காலுக்கு வடபுறம் பாசனம் பெறுகின்ற நிலையும், அதற்கு தெற்குப்புறம் உள்ள 15 ஏரிகளுக்கு பாசனம் பெற முடியாத நிலையில் இருக்கிறது, வானம் பொய்த்தால் அங்கே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்கள் வேலை இன்றி வேறு எங்காவது பிழைப்பைத் தேடி போகவேண்டிய நிலை இருக்கிற காரணத்தால், இந்த ஆண்டிலாவது அல்லது அடுத்த ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல இந்த வடிமுனை குழாய்க் கிணறுகளை அமைத்தோ அல்லது பம்பிங் சிஸ்டம் மூலமாகவாவது இந்த ஏரிகளுக்குத் தண்ணீர் கொடுத்து இந்த விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்,

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஆற்றினுடைய ஒரு பகுதியிலே வளமும் மறு பகுதியிலே வறட்சியும் இருப்பது இயற்கையினுடைய அமைப்பு. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை வந்தபோது ஒரு தனிக் கையேடு கொடுத்திருக்கிறேன், எந்தெந்தத் திட்டத்திலே எவ்வளவு உரத்துக்கு மானியம் தருகிறோம்; மோட்டாருக்குத் தருகிறோம்; பைப் லைனுக்குத் தருகிறோம், ஸ்பிரேயர் வாங்குவதற்குத் தருகிறோம் என்ற புத்தகமெல்லாம் அவரிடத்திலே தரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் புத்தகத்தைப் பெற்று இருக்கிறார்கள். எனவே, அவர் தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய மாவட்ட வேளாண் இணை இயக்குநரையோ அல்லது அந்த வட்டத்திலேயுள்ள வேளாண் துணை இயக்குநரையோ சந்தித்து அதற்கு வேண்டிய திட்டங்களை அவருடைய தொகுதி மக்களுக்கு அவர் தாராளமாகப் பெற்றுத் தரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 557, திரு. கே. ஆர். முருகானந்தம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,